கிராமப்புற மாணவர்களுக்காக

புரட்சிகரமான திட்டத்தை உருவாக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர்!

கல்வி உச்சி மாநாட்டில் அமைச்சர் கோவி.செழியன் பேச்சு!

சென்னை, பிப். 2- ''கிராமப்புற மாணவர்களுக்காக புரட்சிகரமான திட்டத்தை உருவாக்கியவர் முத்தமிழறஞர் கலைஞர் அவர்கள்'' என்று உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் அவர்கள் இந்தியா உலகளாவிய கல்வி உச்சி மாநாடு - 2026ல் பேசும் போது கூறினார்.

சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற இந்தியா உலகளாவிய கல்வி உச்சி மாநாடு 2026இல்மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர்முனைவர் கோவி. செழியன் அவர்கள் பேசியதாவது :

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அய்யன் திருவள்ளுவர் அவர்கள் 'கற்க' என கல்வியின் சிறப்பினை இம்மண்ணில் வலியுறுத்தியுள்ளார். இந்த மண்ணில் இந்த உலகளாவிய முதல் கல்வி உச்சி மாநாடு நடத்துவது சிறப்பு.

சிறப்புமிக்க உலகப் பிரதிநிதிகளே, துணை வேந்தர்களே, தொழில் துறைத் தலைவர்களே, புதுமை யாளர்களே, மாணவர்களே மற்றும் நண்பர்களே - வணக்கம். மனித மாண்புக்கும் சமூக முன்னேற்றத்திற்கும் கல்விதான் மிகவும் சக்திவாய்ந்த உந்துசக்தி என்பதை நீண்ட காலமாக உணர்ந்துள்ள தமிழ் மண்ணில் நாம் இங்கு கூடியிருக்கிறோம்.சென்னையில் UK, இந்தியாதேசிய மாணவர்கள்மற்றும் முன்னாள்மாணவர்சங்கம் (National Indian Students and Alumni Union (NISAU)) உடன் இணைந்து தமிழ் நாடு அரசால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, இந்தியா உலகளாவிய கல்வி உச்சி மாநாடு 2026 சிறப்பாக நடைபெற்று வருகிறது.

உயர்கல்வியில் தமிழ்நாடு முன்மாதிரி!

முதலமைச்சர் அவர்களின் 'நான் முதல்வன்', 'புதுமைப் பெண்', 'தமிழ் புதல்வன்' போன்ற சீரிய திட்டங்களினால் இந்தியா விலேயே தமிழ்நாடு தான் உயர்கல்வியில் அனைத்து மாநிலங்களுக்கும் முன்மாதிரியாக திகழ்கிறது. 'கல்வியில் சிறந்த தமிழ்நாடு', 'இருமொழிக் கொள்கையை கொண்ட தமிழ் நாடு'; இது தான் தமிழ் நாட்டிற்கு பெருமை. அண்ணல் அம்பேத்கர் உயர்கல்வி உதவித் திட்டம் போன்ற திட்டங்கள், பட்டியல் சாதிகள் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த மாணவர்கள் வெளிநாடுகளில் உயர் படிப்புகளைத் தொடர உதவியுள்ளன.

எனவே, இந்த உலகளாவிய கல்வி உச்சி மாநாடு தமிழ்நாட்டில் நடைபெறுவது மிகப் பொருத்தமானது. சமூக மேம்பாடு, பொருளாதார முன்னேற்றம் மற்றும் மனிதவள உருவாக்கம் ஆகிய வற்றில் தமிழ்நாடு நீண்ட காலமாக ஒரு தேசியத் தலைநகரமாகத் திகழ்கிறது. தமிழ்நாட்டில் 61க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்கள், கலை, அறிவியல், தொழில்நுட்ப மற்றும் தொழில்முறை கல்லூரிகளின் பரந்த வலையமைப்பு மற்றும் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத்தின் வலுவான கலாச்சாரத்தைக் கொண்டுள்ளது. முதலமைச்சர் அவர்களின் முன் முயற்சிகளால் உயர்கல்வியில் மொத்த மாணவர் சேர்க்கை விகிதத்தில் (GER) 47%க்கும் மேலாக கணிசமாக உயர்ந்துள்ளது- இது தேசிய சராசரியை விட மிக அதிகம்.

முன்னாள் முதல மைச்சர் முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்கள் ஏழை, எளிய கிராமப்புற மாணவர்களுக்காக ஒரு குடும்பத்தில் முதல் பட்டதாரி மாணவருக்கு 5 சதவீதம் கூடுதல் மதிப்பெண் வழங்கும் புரட்சிகரமான திட்டத்தினை செயல்படுத்தி குடும்பத்தின் முதல் பட்டதாரியை உருவாக்கினார். மேலும், பொறியியல் கல்லூரி நுழைவுத் தேர்வை இரத்து செய்து கிராமப்புற மாணவர்கள் பெருமளவில் பொறியியல் படிப்புகளில் சேர வழி வகை செய்தார்.

தற்போதைய முதல மைச்சர் அவர்கள் மாணவர்கள் படிக்கும்போதே தொழில் முனைவோராக பயிற்சிப் பெற 'நான் முதல் வன்' என்ற திட்டத்தினை அறிமுகப்படுத்தினார். தமிழ்நாட்டு மாணவர்கள் இந்திய மாணவர்களுடன் அல்லாமல் உலக மாணவர்களுக்கு இணையான கல்வித் தரத்தினை கொண்டுள்ளனர். ஆஸ்திரேலியா போன்ற மேலைநாட்டு மாணவர்கள் தமிழ்நாட்டிற்கு வந்து ஆராய்ச்சிப் படிப்பினை மேற்கொள்கின்றனர். "கல்வித் தான் அறிவு ஒளியின் உச்சம்" என்ற உணர்ந்த முதலமைச்சர் அவர்கள் உயர்கல்விப் படிப்பிற்கு முக்கியத்து வமளித்து வருகிறார்.

தமிழ்நாடு உலகை அழைக்கிறது!

உயர்கல்வித் துறையின் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்து மாணவர்களும் கல்வி கற்பதை மட்டுமே செய்ய வேண்டும் மற்றவற்றை நான் பார்த்துக் கொள்கிறேன் என்று கூறி அனைத்து உதவிகளையும் செய்து வருகிறார். நமது முதலமைச்சர் அவர்கள் 2030ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டை 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற்றுவதற்கான ஒரு துணிச்சலான இலக்கை முன்வைத்துள்ளார்.

இந்த இலக்கை வெறும் உள்கட்டமைப்பு மூலம் மட்டும் அடைய முடியாது. ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்பது திறமையான மனிதவளம், முன்னணி ஆராய்ச்சி, புத்தாக்கச் சூழல் அமைப்புகள், உலகளவில் போட்டித்தன்மை கொண்ட பல்கலைக்கழகங்கள் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வாய்ப்புகள் ஆகியவற்றின் மீது கட்டியெழுப்பப்பட வேண்டும். எனவே, உயர் கல்வி என்பது ஒரு துணைத் துறை அல்ல, மாறாக டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தின் உந்துசக்தி ஆகும்.

இங்கு கூடியுள்ள அனைத்துப் பிரதிநிதிகளையும், தமிழ்நாட்டின் முன்னேற்றத்தைக் காண்பதற்கு மட்டுமல்லாமல், கல்வி என்பது பகிரப்பட்ட செழுமையின் அடித்தளமாக மாறுவதற்காக எங்களுடன் பங்காளராக இணையவும் நாங்கள் வரவேற்கிறோம். நீதியுடன் கூடிய வளர்ச்சி, அனைவரையும் உள்ளடக்கிய புத்தாக்கம் மற்றும் அனைவருக்கும் வாய்ப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட திராவிட மாதிரியின் உணர்வில், இந்த எதிர்காலத்தை எங்களுடன் இணைந்து உருவாக்க தமிழ்நாடு உலகை அழைக்கிறது.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் அவர்கள் பேசினார்.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் 155ஆம் ஆண்டு ஜோதி தரிசன விழாவினை முன்னிட்டு வடலூர் அருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையத்தில் ஜோதி தரிசனத்தினை நேற்று (01.02.2026) வழிபட்டனர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சி.பி. ஆதித்யா செந்தில் குமார், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி தமிழரசி ரவிக்குமார், மாநகராட்சி மேயர் திருமதி சுந்தரி ராஜா, என்.எல்.சி தலைவர்/ நிருவாக இயக்குநர் பிரசன்னகுமார் மோட்டுப்பள்ளி, இந்துசமய அறநிலையத்துறை மண்டல இணை ஆணையர் ஜோதி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

கழகத் தலைவர் பிறந்தநாளை முன்னிட்டு—சைதையில்

"முதல்வர் கோப்பை" மாநில அளவிலான மாபெரும் மின்னொளி கபடிப் போட்டி!

திரைப்பட முன்னணி நடிகர்கள் தொடங்கி வைக்கின்றனர்; மாவட்டச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

சென்னை. பிப்.2

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் மார்ச் 1 பிறந்தநாளை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்டம் சைதாப்பேட்டையில் தமிழ்நாட்டின் முன்னணி கபடி வீராங்கனைகள் பங்கேற்கும் சைதையில் முதல்வர் கோப்பைக்கான மாபெரும் மாநில அளவிலான மின்னொளி கபடி போட்டி பிப்ரவரி 5ஆம் நாள் தொடங்கி பிப்.6, மற்றும் பிப்.7 ஆகிய மூன்று நாட்கள் நடைபெற உள்ளது.

இம்மின்னொளி கபடிப் போட்டியில் தமிழ்நாடு முழுவதிமுமிருந்து கபடி வீராங்கனைகள் பங்கேற்க இருக்கின்றனர். இப்போட்டியில் வெற்றிபெறும் முதல் நான்கு அணிகளுக்கு முதல் பரிசு ரூ.5 லட்சமும், இரண்டாவது பரிசு 3 லட்சமும், மூன்றாவது பரிசு ரூ.2 லட்சமும், நான்காவது பரிசு ரூ.1 லட்சமும் வழங்கப்படவிருக்கிறது.

கால்இறுதியில் வெளியேறும் நான்கு அணிகளுக்கு தலா ரூ.50 ஆயிரமும் பரிசுகளும் மற்றும் சிறந்த வீராங்கனைக்கு உயரிய பரிசும் வழங்கப்பட உள்ளது.

பிப்ரவரி 5 அன்று மாலை 5.30 மணிக்கு தொடங்கும் இந்தப் போட்டியில் வீராங்கனைகளை உற்சாகப்படுத்தி, ஊக்கப்படுத்த சிறப்பு விருந்தினர்களாக புரட்சி நடிகர் இனமுரசு சத்யராஜ் மற்றும் பைசன் திரைப்படத்தின் நிஜ கதாநாயகன் மினத்தி பி.கணேசன் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

பிப்ரவரி 6 அன்று மாலை 5.30 மணிக்கு நடைபெறும் கபடிப் போட்டியில் வீராங்கனைகளை உற்சாகப்படுத்தி, ஊக்குவிக்க சிறப்பு விருந்தினர்களாக தேசிய விருது பெற்ற குணச்சித்திர நடிகர் எம்.எஸ். பாஸ்கர் மற்றும் குணச்சித்திர நடிகர் - ஒளிப்பதிவாளர் இளவரசு ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

இறுதி நாளான **பிப்ரவரி 7** அன்று மாலை 5.30 மணிக்கு நடைபெறும் கபடிப் போட்டியில் வீராங்கனைகளை உற்சாகப்படுத்தி, ஊக்குவிக்க சிறப்பு விருந்தினர்களாக வைகைப் புயல் வடிவேலு மற்றும் கலைமாமணி திரைப்பட நடிகை தேவயானி ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

எனவே கழகத் தலைவர் பிறந்தநாளை முன்னிட்டு நடைபெற உள்ள மின்னொளி கபடிப் போட்டியில் பல்லாயிரக்கணக்கில் தி.மு.கழகத் தோழர்கள் பங்கேற்றிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

எஸ்.மதன்மோகன் தலைமை! ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் வரவேற்புரை! கே.மகேஷ் முன்னிலை!

சேப்பாக்கத்தில் 'தமிழ்நாடு தலைகுனியாது' மாபெரும் பொதுக்கூட்டம்!

எம்.எம்.அப்துல்லா—தயாநிதி மாறன் எம்.பி.—மு.க.தமிழரசு—நே.சிற்றரசு—சி.எச்.சேகர் சிறப்புரை

சென்னை, பிப்.2,

சென்னை மேற்கு மாவட்டம், சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதி தி.மு.க. சார்பில் 'தமிழ்நாடு தலைகுனியாது' - மாபெரும் பொதுக்கூட்டம் நாளை (3.2.2026) மாலை 6 மணிக்கு, சிந்தாதிரிப்பேட்டை கலவை தெருவில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு பகுதிக் கழகச் செயலாளர் -மண்டலக்குழுத் தலைவர் எஸ். மதன் மோகன் தலைமை வகிக்கிறார். திருவல்லிக்கேணி பகுதிச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ் அனைவரையும் வரவேற்புப் பேசுகிறார். 62(அ) வட்டச் செயலாளர் கே.மகேஷ் முன்னிலை வகிக்கிறார்.

இக் கூட்டத்தில் எம். எம்.அப்துல்லா, தயாநிதி மாறன் எம்.பி., மு.க.தமிழரசு, மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, தொகுதி பொறுப்பாளர் சி.எச். சேகர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் ஆர்.ஜெகதீசன், பி.பிரபாகரன், மு.சின்னராஜ், கே.கோபி, அ.தமீம் அன்சாரி, ஜி.வெங்கடேசன், வி.ஈஸ்வரி வெங்கடேசன், ஐ.சி.எப்.எம்.சங்கர், ஜெ.விஜயகுமார், க. வே.மோகன், என்.ரவி, கே.பிரபு, கே.ஜி.செந்தில்குமார், எஸ்.சசிகுமார், வே. கமலாசெழியன், எம்.ராஜ காந்தம், எஸ்.எச்.ரஹமத் துல்லா, எஸ்.சுரேஷ்குமார், பி.கணேஷ்பிரபு, ஜி.ராஜ ராஜன், சி.கே. ரெங்கராஜன், ப.பிரகாஷ், வி.பி. பொன்னரசு, டாக்டர் ஆர். சுபேர்கான், ஆர்.என். துரை, வி.என்.ராஜன், மிக்ஸி அலிப், சா.மல்லி காபீ, வி.பி.சிதம்பரம், பி. பாலசந்தர், எப்.நசீர், ஆர். ராதாகிருஷ்ணன், யு.மாலீக் பாஷா, இ.அமானுல்லா, என்.தணிகாசலம், என். செல்வம், ஏ.ஜஹாங்கீர், ஆர். அன்பழகன், எம்.நந்த குமார், எஸ்.எஸ்.குமார், எஸ்.எஸ்.கண்ணன், ஆர். சிவராஜ், ரவி. ராஜ்குமார், ஏ.விஜயராஜ், சி.சாய் குமார், சி.சாது, வி.பி.கதிரவன், ஆர்.எஸ்.சந்திரகுமார், ஆர். வினோத்கண்ணா, சேப்பாக்கம் ராஜி, ஷேக்தாவூத், வி.கலையரசி, மேரி இசபல்லா, வேல்முருகன், கே.சக்திவேல், ஒய்.ராமச்சந்திரன், டி.சிவகுமார், வி.ரமணி, மு.வெங்கடேசன், ஏ.ஆர். பி.எம்.டி.ஸ்ரீனிவாசன், எம். பிரேம் ராஜா, இ.இளம்பாரதி,

எம்.கே. ஆனந்த், ம.தயாநிதி, கே.திருநாவுக்கரசு, சி.தினகரன், ஆர்.பத்மாவதி, ஜி. ஜெ.கிரிதரன், வே.கார்த்திக், வழக்கறிஞர் எஸ்.கஜேந்திரன், எஸ்.சந்திரநாதன், பி.சலாவுதின், என்.வடிவேலன், ஜெ.விஜய், பி.கார்த்திக், ஏ.அன்வர்பாஷா, ஜெ.டி. தீபக், எம்.சுமதி, உஷாகந்தவேல், டி.ஸ்ரீதர், எம்.சந்தோஷ்குமார், அ.வேதா, உதயசூரியன், என்.ராஜ்குமார், ஆர்.கௌதம், கே.சுரேஷ் பாபு, டிங்கர் பாலாஜி, எஸ்.ஜெய்சங்கர், எம்.நிஜாம், கே.முருகேசன், பி.அமுதா, கே.டி.ராமலிங்கம், கே.பாஸ்கரன், என்.எஸ்.பாஸ்கரன், எஸ். பரமசிவம், வி.நடராஜன், என்.ஸ்ரீகாந்த், மு.ராமச்சந்திரன், ஐகூர் ப.மதிமன்னன், என்.கலைமகன், ஆர். தேவராஜன், பி.ஆர். பாலாஜி, மு.துரைசாமி, ம.சுதாகர், டி.விஜயகுணபதி, பா.ஜெயவேல், அ.நெல்லைபுகாரி, வா.ரமேஷ், சு.நடராஜன், ஸ்ரீபிரியா பாண்டுரங்கன், ரா.செங்கோல் அமலநாதன், மா.ச.மணி, ச.செல்வராஜ், மு.முகமதுஇப்ராகிம், ஆர்.டி.வெங்கடேஸ்வரன், பி.எஸ்.ஸ்ரீதர், டி.அயூப் கான், டி.குமார், எப்.செல்வராஜ் என்கிற இ.எஸ்.ராஜி, பி.லட்சுமிவசந்தா, ஜி.வேதாசலம் எஸ்.மதன், ஜி.பிரபு, என்.ரிஸ்வான், சே.பிர்முகமது, ஏ,அருண், எஸ்.தனஞ்செழியன், கே.சரவணராஜா, எஸ். சுரேஷ், டி.ஆர்.ராஜகுமாரி, எஸ்.தனசேகர், கே.அன்பு, கே.ரமேஷ், எஸ்.ஹாஜா மொய்தீன், கே.சுரேஷ்பாபு, பி.எஸ். மணி என்கிற சுப்பிரணி, எம்.ஆர்.சிவக்குமார், ஆர். பாஸ்கர், க.சியாமளா, க.சந்திரன், த.அரவிந்த், எஸ்.விஜயன், டி.ஜி.சிவா, சி.செல்வமணி, எம்.செல்வம், சி.ராஜன், கே.சங்கர், பி.ராஜன், ஆர்.வனவேணி, டி.அசோக்குமார், கே.செல்வகுமார், ஜெ.அரசு, நெ.சாம்சன் ஜெயக்குமார், ஒய்.அப்பாஸ் அலிபேக், டி.முருகன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். சேப்பாக்கம் பகுதி துணைச் செயலாளர்கள் எம்.சி.பி. இளையராஜா, எஸ். கே.ராஜ் ஆகியோர் நன்றி கூறுகின்றனர். கூட்டத்திற்கான ஏற்பாட்டினை சேப்பாக்கம் பகுதி தி.மு.க.செய்துள்ளது.

வெளிநாட்டு காலணி நிறுவனங்கள் தமிழகத்தில் ரூ.12,000 கோடி முதலீடு!

தோல் பொருள் ஏற்றுமதி நிறுவன இயக்குநர் தகவல்!

சென்னை, பிப். 2- வெளிநாட்டு காலணி நிறுவனங்கள் தமிழகத்தில் கடந்த 4 ஆண்டுகளில் ரூ.12,000 கோடி முதலீடு செய்துள்ளதாக தோல் பொருள் ஏற்றுமதி நிறுவனத்தின் இயக்குநர் ஆர். செல்வம் தெரிவித்தார்.

இதுதொடர்பாக சென்னையில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

இந்திய சர்வதேச தோல் மற்றும் தோல் பொருள்கள் கண்காட்சி ஞாயிற்றுக்கிழமை (பிப்.1) முதல் பிப். 3ஆம் தேதி வரை சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள வர்த்தக மையத்தில் நடைபெறுகிறது.

இந்தக் கண்காட்சியில் தோல் மூலப் பொருள்கள் மற்றும் காலணிகள் தொடர்பான அனைத்து பொருள்களும், இயந்திரங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இதில், 350 இந்திய தோல் பொருள் உற்பத்தி நிறுவனங்களும், 80 வெளிநாட்டு நிறுவனங்களும் பங்கேற்கின்றன. இந்தியாவில் இருந்து ஐரோப்பிய ஒன்றியத்துக்கு 43 சதவீத தோல் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.

5 லட்சம் பேருக்கு வேலை கிடைத்துள்ளது!

இந்தத் துறை மூலம் வரும் 2030ஆம் ஆண்டுக்குள் 50 பில்லியன் டாலர் ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை 14 பில்லியன் டாலர் இலக்கை அடைந்துள்ளோம். இந்தியாவில் இருந்து தோல் பொருள்கள் ஏற்றுமதியில் 40 சதவீதம் தமிழகத்தில் இருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தமிழகத்தில் ராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி, அரியலூர், பெரம்பலூர், செய்யாறு, திண்டிவனம் உள்ளிட்ட இடங்களில் வெளிநாட்டு காலணி நிறுவனங்கள் தொழிற்சாலைகளைத் தொடங்கியுள்ளன. வெளிநாட்டு காலணி நிறுவனங்கள் தமிழகத்தில் கடந்த 4 ஆண்டுகளில் ரூ.12,000 கோடி முதலீடு செய்துள்ளது. இதன்மூலம் 5 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது.

தமிழகத்தில் உள்ள தோல் பொருள் உற்பத்தி தொழிற்சாலைகளில் 80 சதவீத பெண்கள் பணியாற்றி வருகின்றனர். இதன்மூலம் பெண்களின் வாழ்வாதாரம் உயர்ந்துள்ளது. மேலும், சமூக பொருளாதாரம் வளர்ச்சி அடைந்துள்ளது என்றார் அவர்.

பேட்டியின்போது தோல் பொருள் ஏற்றுமதி நிறுவனத்தின் தெற்கு பிரிவின் தலைவர் எம்.அப்துல் வஹாப் உடனிருந்தார்.

வேளச்சேரி மேற்குப் பகுதிக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

பகுதிப் பொறுப்பாளர் வே.ஆனந்தம் எம்.சி. அறிக்கை!

சென்னை, பிப். 02 -

தன்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி மேற்கு பகுதிக் கழகப் பொறுப்பாளர் வே.ஆனந்தம் எம்.சி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

வேளச்சேரி மேற்கு பகுதிக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, பகுதி அவைத் தலைவர் சி.பழனி தலைமையில் இன்று (02.02.2026 - திங்கட்கிழமை) மாலை 6 மணி அளவில், வேளச்சேரி, சிறுவர் விளையாட்டு பூங்கா, விஜயநகர், 1 வது மெயின் ரோட்டில் உள்ள பகுதிக் கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் பகுதிக் குட்பட்ட மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் மற்றும் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர்கள், வட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்கும் மாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:-

கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு வேளச்சேரி மேற்குப் பகுதிக் கழகப் பொறுப்பாளர் வே.ஆனந்தம் எம்.சி. தெரிவித்துள்ளார்.

தாம்பரம் மாநகர தி.மு.க., அவைத்தலைவர் கோ.காமராஜ் தலைமையில் நடைபெற்ற தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் கலந்தாலோசனை கூட்டத்தில் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., சிறப்புரையாற்றினார். உடன் மாநகர துணை செயலாளர்கள் மேயர் க.வசந்தகுமாரி, பொன்.சதாசிவம், பகுதி கழக செயலாளர்கள் எஸ்.சேகர், டி.காமராஜ், எஸ்.இந்திரன், இரா.சுரேஷ், ஆ.நடராஜன் பொதுக்குழு உறுப்பினர் க.தேவேந்திரன் ஆகியோருடன், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளனர்.